வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி 17.02.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரானும் இன்று மும்பையில் உள்ள லோக் பவனில், இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினர்.

பாரத் விஸ்தார் எனப்படும், விவசாயிகளுக்கான டிஜிட்டல் செயலியை, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் தொடக்கி வைத்தார்.

இலங்கை கடற்படையால், கைது செய்யப்பட்ட, 14 மீனவர்களை விடுதலை செய்ய, நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார்.

காரைக்கால் ஆகாஷ்வாணி சார்பில், வானொலி உழவர் நாள் 2026 கருத்தரங்கம் நாளை மாத்தூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறுகிறது.

---

மோடி-மேக்ரான் (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரானும் இன்று மும்பையில் உள்ள லோக் பவனில், இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினர். பாதுகாப்பு, வர்த்தகம், மற்றும், கலாச்சார பரிமாற்றம் உள்ளிட்ட முக்கிய துறைகளில், இந்தியாவிற்கும், பிரான்சிற்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து, தலைவர்கள் விவாதித்தனர். இதன் தொடர்ச்சியாக பல்வேறு துறைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, மும்பைக்கு வருகை புரிந்த பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரான், தாஜ்மஹால் அரண்மனை ஓட்டலில் கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற மும்பை பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி

செலுத்தினார். பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில், இந்தியாவுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து, மீண்டும் தமது உறுதியை வெளிப்படுத்தினார்.

-----------------------------------------

*மோடி- செயற்கை நுண்ணறிவு 1 (9)*

புதுடெல்லியில், நேற்று தொடங்கிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சி மாநாடு, புதுமைப் படைப்புகள், இளைஞர்களுக்கான எதிர்காலம் உள்ளிட்டவற்றை ஒருங்கிணைப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த உச்சி மாநாட்டில், செயற்கை நுண்ணறிவு குறித்து மக்கள் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். செயற்கை நுண்ணறிவை மனித மேம்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டும் என்பதில், மத்திய அரசு முழு கவனம் செலுத்தி வருவதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு…..

(வாய்ஸ்)

*மோடி- செயற்கை நுண்ணறிவு 2 (19)*

(வாய்ஸ்)

புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில், வரும் 20ஆம் தேதி வரை நடைபெறும் இந்த செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில், 300 கண்காட்சி அரங்குகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த மாநாட்டின் 2ஆம் நாளான இன்று, நீடித்த மற்றும் புதுமை வளர்ச்சிக்கு, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவது குறித்து, உயர்மட்டக் குழுவினர், தொடர் விவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது, சமூக நன்மைக்கான செயல்பாடுகளில், செயற்கை நுண்ணறிவின் தாக்கம் போன்றவை குறித்து விவாதிக்கப் பட்டன. தேசிய பாதுகாப்பில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்தும், செயற்கை நுண்ணறிவு பயன்பாடு அதிகரிக்கும் போது ஏற்படும் இணையப் பாதுகாப்பு பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. சுகாதாரம், கல்வி, எரிசக்தி, விவசாயம், பாலின அதிகாரமளித்தல் போன்றவற்றில், செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த புத்தகங்களும் இந்த மாநாட்டில் வெளியிடப்பட்டன. இந்த உச்சி மாநாடு, உலகின் தென்பகுதியில் நடத்தப்படும் முதல் மாநாடாக திகழ்கிறது. 20 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். உலகளாவிய தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், விஞ்ஞானிகள், மற்றும், நிபுணர்களை ஒருங்கிணைத்து, நிர்வாகம், புதுமை,

மற்றும், நிலையான வளர்ச்சிக்கு வித்திடும் வகையில், செயற்கை நுண்ணறிவின் மேம்பட்ட பயன்பாடு



குறித்து விவாதிக்க, இந்த மாநாடு வழிவகை செய்கிறது. செயற்கை நுண்ணறிவின் எதிர்கால முக்கியத்துவத்தை உணர்ந்த இந்தியா, அது தொடர்பான, வலுவான, மற்றும், உள்ளார்ந்த செயற்கை நுண்ணறிவு சூழல் அமைப்பை உருவாக்க, அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்திய செயற்கை நுண்ணறிவுத் திட்டம், மற்றும், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் செயற்கை நுண்ணறிவை மேம்படுத்துதல் போன்ற அடிப்படையான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

------------------------------------------

அனுப்பிரியா பட்டேல் (10)

இந்தியாவின் சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப் பட்டுள்ளதாக, மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், சுகாதாரத் துறையில் இந்த தொழில்நுட்பத்தை மேலும் பரவலாக்க, மத்திய அரசு உறுதிப்பூண்டிருப்பதாக கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலை நோக்குப் பார்வையின் அடிப்படையில், வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில், சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு அமையும் என்றும், திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

------------------------------------------

ஷிவ்ராஜ் சிங் சௌகான் (9)

பாரத் விஸ்தார் எனப்படும், விவசாயிகளுக்கான டிஜிட்டல் செயலியை, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் இன்று, ஜெய்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடக்கி வைத்தார். அப்போது உரையாற்றிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் செயல்படும் இந்த செயலி மூலம், மண்வளம், வானிலை, வேளாண் பொருட்களுக்கான சந்தை நிலவரம் போன்ற தகவல்களை, விவசாயிகள் எளிதாக பெற முடியும் என்றார். முதல்கட்டமாக இந்த சேவை, தொலைபேசி மூலமாகவும், அதனை தொடர்ந்து மொபைல் செயலி மூலமாகவும் வழங்கப்படும் என்றும், கூறினார்.

------------------------------------------

*தமிழ்நாடு பட்ஜெட்* (12)

தமிழக சட்டப் பேரவையில், 2026-27ஆம் நிதியாண்டிற்கான இடைக்கால பட்ஜெட்டை, அம்மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இன்று தாக்கல் செய்தார். 2026-27 நிதியாண்டிற்கான இடைக்கால பட்ஜெட் மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி வருவாய், 2 லட்சத்து 29 ஆயிரத்து 579 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஜிஎஸ்டி வரி சீரமைப்பின் தாக்கம், பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சி, மற்றும், வரி வசூல் திறனில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2026-27ஆம் நிதியாண்டில், 11.15 சதவிகிதமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த இடைக்கால பட்ஜெட்டில் மொத்த வருவாய் செலவினம், 3 லட்சத்து 78 ஆயிரத்து 917 கோடியாக உள்ளது.

---------------------------------------------

*ரங்கசாமி கடிதம்* (9)

எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையால், கடந்த 15ஆம் தேதி, படகுடன் கைது செய்யப்பட்ட, காரைக்காலைச் சேர்ந்த 8 மீனவர்கள், தமிழகத்தைச் சேர்ந்த 6 மீனவர்கள் என, 14 மீனவர்களை விடுதலை செய்ய, நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார். இதே கோரிக்கையை வலியுறுத்தி, துணை நிலை ஆளநர் திரு. கைலாஷ்நாதன், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கும், மத்திய இளைஞர் விவகாரங்கள், மற்றும், விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவிற்கும் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

---------------------------------------------

*நாடக விழா 1 (6)*

புதுச்சேரி அரசின் கலை-பண்பாட்டுத் துறை சார்பில், நாடக தந்தை தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் நாடக விழா, இன்று தொடங்கி, வரும் 24ஆம் தேதி வரை நடைபெறுகிறது. புதுச்சேரி முருங்கப்பாக்கம் திரௌபதி அம்மன் கோவில் திடலில், 8 நாட்கள், பல்வேறு நாடகக் குழுக்கள் சார்பில், மாலை 5 மணி முதல், இரவு 10 மணி வரை, நாடகங்கள் நடைபெறுகின்றன. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…..

(வாய்ஸ்)

*நாடக விழா* 2 (12)

(வாய்ஸ்)

புதுச்சேரியில், மேடை நாடகங்களை ஊக்குவிக்கும் வகையில் நாடகத் தந்தை தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் நாடக விழா, ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. உள்ளூர் நாடக கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் புதுச்சேரி அரசு சார்பில், 8 நாட்கள் நடைபெறும் இந்த நாடக விழாவில், தினமும் 5 நாடகக் குழுவிற்கு, வாய்ப்பு அளிக்கப் படுகின்றது. அவர்கள், 50 நிமிட அளவிற்கு தங்களின் நாடகங்களை அரங்கேற்றம் செய்வார்கள். இன்று மாலை நடைபெறும் இதன் தொடக்க விழாவில், கலை-பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என் திருமுருகன் கலந்து கொண்டு, நாடக விழாவை தொடக்கி வைக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, கலை-பண்பாட்டுத் துறை செயலர் திரு. முகமது ஹசன் அபித், துறை இயக்குநர் திரு. சக்திவேல் ஆகியோரும் தொடக்க விழாவில் பங்கேற்கின்றனர்.

------------------------------------------

*வானொலி உழவர் நாள் 1 (17)*

காரைக்கால் ஆகாஷ்வாணி சார்பில், வானொலி உழவர் நாள் 2026 கருத்தரங்கம் நாளை மாத்தூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறுகிறது. நாளை காலை 10 மணிக்கு தொடங்கும் இந்நிகழ்ச்சியில், காரைக்கால் ஆகாஷ்வாணியின் உதவி இயக்குநர் திருமதி T.K. காயத்ரி தேவி தொடக்க உரையாற்றுகிறார். காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் திரு. ஆர். கணேசன், விழா சிறப்புரை நிகழ்த்துகிறார். இந்நிகழ்ச்சியில், கால்நடை நலத் துறை இணை இயக்குநர் மருத்துவர் சுரேஷ், கறவை மாடுகளின் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான உத்திகள் குறித்தும், உழவியல் பேராசிரியர் முனைவர் நாராயணன், இன்றைய வானிலைக்கேற்ப வேளாண்மையில் வானொலியின் முக்கியத்துவம் குறித்தும், நிரவி இந்தியன் வங்கி கிராமப்புற மேம்பாட்டு அதிகாரி திரு. ஜெயசூர்யா, வங்கிகளில் கிடைக்கும் விவசாயம் தொடர்பான அரசாங்கத் திட்டங்கள் குறித்தும், தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுனர் திரு. கதிரவன், தோட்டக்கலை மூலம் பயிர்ப் பல்வகைப் படுத்துதல் என்பது குறித்தும், திருவாரூர் கள அலுவலர் திரு. பரஞ்ஜோதி, மண் சுகாதார மேலாண்மை, மற்றும், புதிய பருவ உரங்கள் என்பது குறித்தும், விளக்கம் அளிக்க உள்ளனர்.

------------------------------------------

*வானொலி உழவர் நாள்* 2 (5)

மேலும் இக்கருத்தரங்கில், காலை 9 மணி முதல், மதிப்புக் கூட்டப்பட்ட விவசாய விளைப் பொருட்களின் கண்காட்சிக்கும் ஏற்பாடு

செய்யப் பட்டுள்ளது. இக்கருத்தரங்கின் வானொலி தொகுப்பு, காரைக்கால் பண்பலையில், வரும் 21ஆம் தேதி சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு ஒலிப்பரப்பாகிறது.

---------------------------------------------

*காரைக்கால் மருத்துவ முகாம்* (11)

புதுச்சேரி இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும், காரைக்கால் மாவட்ட நிர்வாகம் இணைந்து, வரும் வெள்ளிக் கிழமையன்று, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில், சிறப்பு மருத்துவ முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முகாமில், குழந்தைகள் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஸ்ரீராம், நரம்பியல் நிபுணர் டாக்டர் ஸ்ரீதேவி, இதய நோய் நிபுணர் டாக்டர் பாலமுருகன், சிறுநீரக சிகிச்சை நிபுணர் டாக்டர் ஹரிதேவ் குமார் ஆகியோர் கலந்து கொண்டு, சிகிச்சை அளிக்க உள்ளனர். காரைக்காலைச் சேர்ந்த பொது மக்கள், தங்களுடைய மருத்துவ ஆவணங்களுடன், இம்முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு, மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ரமேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

---------------------------------------------

*வானிலை (8)*

இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, நாளை வலுவடையக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதன் காரணமாக, அடுத்த 2 நாட்களுக்கு, தமிழகம், புதுச்சேரி, மற்றும், காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலையே நிலவும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், வரும் 20ஆம் தேதி, கடலோர தமிழகம், தென் தமிழகத்தின் உள் மாவட்டங்கள், புதுச்சேரி-காரைக்காலின் ஒருசில இடங்களில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரானும் இன்று மும்பையில் உள்ள லோக் பவனில், இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினர்.

பாரத் விஸ்தார் எனப்படும், விவசாயிகளுக்கான டிஜிட்டல் செயலியை, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் தொடக்கி வைத்தார்.

இலங்கை கடற்படையால், கைது செய்யப்பட்ட, 14 மீனவர்களை விடுதலை செய்ய, நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார்.

காரைக்கால் ஆகாஷ்வாணி சார்பில், வானொலி உழவர் நாள் 2026 கருத்தரங்கம் நாளை மாத்தூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறுகிறது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**